+ திருஅவை செய்தி

தொகுப்பு VI - பிரதி – 111/ ஜனவரி 03, 2020 (நிறுவிய நாள் - 25/02/201)

அப்போஸ்தலிக்க, கத்தோலிக்க ஆசிரியத்திற்கு கீழ்ப்படிந்திருக்கும்
திருஅவைக்கும், உலகுக்கும் பயன்தரும் வகையில் நற்செய்தி
வாசகர்களாய் பதிவு செய்பவர்களுக்கு இலவசமாய் மின்னஞ்சல் மூலம் பகிரப்படுகிறது

திருத்தந்தை, திருப்பீடம், திருஅவை மற்றும் பொதுவான செய்திகளின் தொகுப்பு
அனைத்துப் புகைப்படங்கள், சித்திரங்கள், பக்கங்கள் படைப்பாக்கப் பொதுமங்கள் (Creative Commons)
வத்திக்கான் செய்திகள் https://www.vaticannews.va/ta/

ஆசிரியர் குழு : மதுரை ஆனந்த், ஆரோக்கியம் டென்னிஸ், சார்லஸ் இருதயம், பிரான்சிஸ் நல்லப்பன் OMI, ஜெயபாலன் ரபேல் SDB, ஜாக்குலின் மேரி SSAM, ஜோமிக்ஸ்,
மரிய அருள் ராஜா S.J., நித்ய சகாயம் OFM, இனிகோ ஜோக்கிம் SSAM மற்றும் K. M. செல்வராஜ்

தொடர்புக்கு : K. M. செல்வராஜ், ஆசிரியர், திருஅவை செய்தி
7/151A, ஹெல்த்கேம்ப், கூடலூர் - 643 211, நீலகிரி மாவட்டம் தமிழ்நாடு
Cell : 9442541471 email : thiruavaiseithi@gmail.com

வாசிக்கலாம் வாங்க . . . . . .

திருத்தந்தை : புத்தாண்டு நாள் – மூவேளை செப உரை - ஜெரோம் லூயிஸ்
ஆசீரால் நிறைந்த மரியா, ஆசீராக விளங்குகிறார் - ஜெரோம் லூயிஸ்
நன்றி வழிபாட்டில் வாசிக்கப்பட்ட திருத்தந்தையின் மறையுரை - ஜெரோம் லூயிஸ்
தமிழக ஆயர் பேரவையின் 2021ம் புத்தாண்டு செய்தி - மேரி தெரேசா
மகிழ்வின் மந்திரம் - குடும்பம் அமைக்கும் ஆர்வம் - ஜெரோம் லூயிஸ்
"எல்லாருக்கும் உடல், உள்ள சுகம்தரும் ஆண்டாக அமையவதாக" பாளை ஆயர் அந்தோணிசாமி
மறை உரை : ஒளி - பார்த்தலும் பதிலிறுத்தலும் அருள்பணி முனைவர் இயேசு கருணாநிதி
திருஅவை : அமைதியைக் கண்டுகொள்ள, தன்னலப்போக்குகளை கைவிடுக - கிறிஸ்டோபர் பிரான்சிஸ்
பெருந்தொற்று மட்டுமல்ல, பாகுபாட்டு நிலைகளும், கொல்கின்றன - கிறிஸ்டோபர் பிரான்சிஸ்
மகளிர் நலம் : பெண்களுக்கு பாலியல் சுகாதாரம் குறித்த புரிதல் இல்லை! - க்ளோரி டெபோரா
இளைஞர் நலம் : மாணவர் அரசியலில் தமிழகம் ஏன் பின்தங்கிப் போனது? இந்து தமிழ் திசை

திருத்தந்தை : புத்தாண்டு நாள் – மூவேளை செப உரை - ஜெரோம் லூயிஸ் - இறைவனின் தாயாக இன்று நாம் கொண்டாடும் மிகவும் புனிதம் நிறைந்த

மரியாவின் தாய்மையும், பரிவும் நிறைந்த பார்வைக்குக் கீழ் நம்மையே ஒப்படைத்து இந்த ஆண்டை துவக்குகிறோம் – திருத்தந்தை பிரான்சிஸ். இறைவனின் தாயாக இன்று நாம் கொண்டாடும் மிகவும் புனிதம் நிறைந்த மரியாவின் தாய்மையும், பரிவும் நிறைந்த பார்வைக்குக் கீழ் நம்மையே ஒப்படைத்து இந்த ஆண்டை துவக்கு கிறோம் என்ற சொற்களுடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சனவரி 1, இவ்வெள்ளியன்று, வழங்கிய மூவேளை செப உரையைத் துவக்கினார்.



சனவரி 1 புத்தாண்டு நாளன்று திருத்தந்தை வழங்கிய மூவேளை செப உரை (ANSA)

'சியாட்டிகா' எனப்படும் நரம்புத் தொடர்பான பிரச்சனையால், டிசம்பர் 31ம் தேதி மாலை 'Te Deum' நன்றி வழிபாட்டையும், சனவரி 1, இறைவனின் தாய் மரியா பெருவிழா திருப்பலியையும், முன்னின்று நடத்த இயலாமல்போன திருத்தந்தை, இவ்வெள்ளி நண்பகல் வேளையில், வத்திக்கான் நூலகத்திலிருந்து தன் மூவேளை செப உரையை வழங்கினார். வரலாற்றுப் பாதையில் நாம் சந்திக்கும் பிரச்சனைகள், நமக்கு கவலைகளை உருவாக்கினாலும், அன்னை மரியா நம்மை எப்போதும் கவனித்துவருகிறார் என்ற எண்ணத்தில், நாம் நம் பயணத்தைக் துவக்குகிறோம், என்ற நம்பிக்கை நிறைந்த சொற்களை, திருத்தந்தை, தன் உரையின் துவக்கத்தில் கூறினார். அந்த அன்னை நம்மீது காட்டும் பரிவும், அக்கறையும் நம்மிடையே ஒரு கலாச்சாரமாக உருவாகவேண்டும் என்பதும், அதுவே, உலக அமைதியை உறுதிப் படுத்தும் என்பதும், நாம் இவ்வாண்டு சிறப்பிக்கும் உலக அமைதி நாளின் மையக்கருத்து என்பதையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மூவேளை செப உரையில் குறிப்பிட்டார். நாம் வாழும் இன்றையச் சூழலில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடத்திலும், அமைதியை உருவாக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும், ஆறுதல் தேவைப்படுவோரின் கரங்களை நாம் பற்றிக்கொண்டு, அவர்களுக்கு, நம் சொல்லாலும் செயலாலும் ஆறுதல் வழங்கவேண்டும் என்பதையும், திருத்தந்தை, தன் உரையில் வலியுறுத்திக் கூறினார். சுயநலத்தாலும், வேறு பல தீமைகளாலும், ஆபத்தைச் சந்தித்துவரும் உலக அமைதியை பாதுகாக்க, நாம்,

பகிர்வை இவ்வுலகில் அதிகம் வளர்க்கவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வுரையின் வழியே விண்ணப்பித்தார். "அமைதியின் இளவரசரான" (எசா. 9:6) இயேசுவைப் பெற்றெடுத்த கன்னி மரியா, விண்ணுலகிலிருந்து நம் அனைவருக்கும் இந்த அமைதி என்ற கொடையை பெற்றுத்தருவாராக, என்று கூறிய திருத்தந்தை, மனிதர்களின் முயற்சியைக் கொண்டு மட்டும் உருவாக்கமுடியாத இந்த அமைதிக்காக, நாம் தொடர்ந்து இறைவேண்டல் செய்யவும், பொறுமையுடன் உரையாடல்களை மேற்கொள்ளவும் முயல்வோம் என்ற சொற்களுடன் தன் உரையை நிறைவுசெய்தபின், மூவேளை செபத்தைக் கூறி, அனைவருக்கும் ஆசீரளித்தார்.

ஆசீரால் நிறைந்த மரியா, ஆசீராக விளங்குகிறார் - ஜெரோம் லூயிஸ் - ஓர் உயிரை கருவில் தாங்கி, பேணி வளர்த்து, பெற்றெடுப்பதில் பெரும் பொறுமையை வெளிப்படுத்தும் பெண்கள் வழியே, இவ்வுலகம், தன் எதிர்காலத்தை பெற்றெடுக்கிறது – திருத்தந்தை பிரான்சிஸ் மறையுரை. சனவரி 1, புத்தாண்டு நாளன்று கடவுளின் தாயான மரியா பெருவிழா திருப்பலியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனக்கு உருவாகியிருந்த நரம்பு தொடர்பான பிரச்சனையால், முன்னின்று நடத்த இயலாத நிலையில், இத்திருப்பலியை, புனித பேதுரு பெருங்கோவிலில் நிறைவேற்றிய திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், திருத்தந்தை எழுதியிருந்த மறையுரையை வாசித்தார்.

மரியா இறைவனின் தாய் பெருவிழா திருப்பலியை நிறைவேற்றிய கர்தினால் பியெத்ரோ பரோலின் (ANSA)

ஆசீர்வதித்தல், பெற்றெடுத்தல், கண்டுபிடித்தல் என்ற மூன்று வினைச்சொற்கள், இறைவனின் தாயிடம் முழுமையடைந்தன என்பதை இன்றைய திருப்பலியின் வாசகங்கள் நமக்குக் கூறுகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தான் எழுதியிருந்த மறையுரையில் குறிப்பிட்டார். நீங்கள் இஸ்ரயேல் மக்களுக்கு ஆசிகூற வேண்டிய முறை; "ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக!" (எண்.

6:23-24) என்று எண்ணிக்கை நூலில் நாம் கேட்கும் சொற்கள், இஸ்ரயேல் மக்கள் ஒருவரையொருவர் எவ்வாறு ஆசீர்வதிக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை, திருத்தந்தை தன் மறையுரையின் முதல் கருத்தாகக் கூறியிருந்தார். இதையொத்த ஓர் ஆசீரை, நாம் செபமாலை செபிக்கும் வேளையில், அன்னை மரியாவை நோக்கி கூறுகிறோம் என்பதை, தன் மறையுரையில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, ஆசீரால் நிறைந்த மரியா நம் அனைவருக்கும் ஆசீராக விளங்குகிறார் என்று எடுத்துரைத்தார். கடவுளின் மகன் பெண்ணிடமிருந்து பிறந்தவராக இவ்வுலகிற்கு வந்தார் என்பதை, புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் கூறியுள்ளார் என்று, தான் எழுதிய மறையுரையில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரியாவின் வழியே கடவுளைச் சந்திப்பது மனிதர்களுக்கு எளிதானது என்று கூறினார். ஓர் உயிரை கருவில் தாங்கி, பேணி வளர்த்து, பெற்றெடுப்பதில் பெண்கள் பெரும் பொறுமையை வெளிப் படுத்துகின்றனர் என்பதை, தன் மறையுரையில் பகிர்ந்துள்ள திருத்தந்தை, பெண்கள் வழியே, இவ்வுலகம், தன் எதிர்காலத்தை பெற்றெடுக்கிறது என்பதையும் வலியுறுத்திக் கூறினார். இடையர்கள் "மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும்; கண்டார்கள்" (லூக். 2:16) என்ற நற்செய்தியின் கூற்றில், இடையர்கள் மாபெரும் காட்சிகளையும், அடையாளங்களையும் காணவில்லை, மாறாக, ஓர் எளிய குடும்பத்தைக் கண்டனர் என்பதை உணர்கிறோம் என்ற கருத்தை, திருத்தந்தை தன் மறையுரையில் கூறியுள்ளார். இடையர்கள் தாங்கள் கண்டதை தங்கள் தனிப்பட்ட சொத்தாக வைத்துக்கொள்ளாமல், அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டதைப் போல், நாம் ஒவ்வொருவரும் நாம் கண்டடைந்த கடவுளை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை திருத்தந்தை தன் மறையுரையின் மூன்றாம் கருத்தாக முன்வைத்தார்.

நன்றி வழிபாட்டில் வாசிக்கப்பட்ட திருத்தந்தையின் மறையுரை - ஜெரோம் லூயிஸ் - எவ்வித விளம்பரம் இன்றி, இவ்வுலகில், பல்லாயிரம் பேர், தங்கள் உதவிக்கரத்தை நீட்டியதற்கும், பாரங்களால் துன்புற்றோரின் பாரங்களைக் குறைக்க முயற்சிகள் மேற்கொண்டதற்கும், திருத்தந்தையின் நன்றி. 'சியாட்டிகா' எனப்படும் நரம்புத் தொடர்பான பிரச்சனையால் டிசம்பர் 31ம் தேதி மாலை 'Te Deum' நன்றி வழிபாட்டில் நேரடியாகக் கலந்துகொள்ள இயலாத திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆண்டின் இறுதி நாளன்று நாம் எவ்வாறு நன்றி நிறைந்தவர்களாக இருக்கமுடியும் என்பதை, ஒரு மறையுரை சிந்தனையாக வழங்கினார்.

டிசம்பர் 31 மாலை புனித பேதுரு பெருங்கோவிலில் நடைபெற்ற 'Te Deum' நன்றி வழிபாடு (Vatican Media)

புனித பேதுரு பெருங்கோவிலில், டிசம்பர் 31 இவ்வியாழன் மாலை நடைபெற்ற நன்றி வழிபாட்டை, கர்தினால்கள் அவையின் தலைவர், கர்தினால் ஜியோவான்னி பத்திஸ்தா ரே அவர்கள், திருத்தந்தைக்குப் பதிலாக முன்னின்று நடத்தி, திருத்தந்தை எழுதியிருந்த மறையுரை சிந்தனைகளை வாசித்தார். நாம் கடந்த வந்த ஆண்டில் குடும்ப உறவுகளை இழந்து, வேலைகளை இழந்து, தனிமையில் துன்புற்று வந்ததால், இந்த ஆண்டைக் குறித்து நன்றி சொல்வது, சற்று செயற்கையாக, கடினமாக உள்ளது என்பதை திருத்தந்தை தன் சிந்தனைகளின் துவக்கத்தில் வெளிப்படையாகக் கூறியுள்ளார். மனிதகுலம் துன்பங்களில் சிக்கியபோது, அதற்கு அறிவுப் பூர்வமான விளக்கங்கள் தருவதற்குப் பதில், இறைவன், தன் ஒரே திருமகனை மனிதனாக நம்மிடையே அனுப்பியதே அவர் தரும் பதில் என்று, திருத்தந்தை, தன் உரையில் குறிப்பிட்டுள்ளார். நல்ல சமாரியரைப்போல், இறைவனும், துன்புறும் மனிதரைக் கண்டதும், தன் பதிலிறுப்பை செயல்வடிவில் காட்டியுள்ளார் என்று, தன் சிந்தனையில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் கடந்த ஓராண்டளவாக சந்தித்த துன்பங்களுக்கு எவ்வகையில் பதிலிறுத்திருக்கிறோம் என்பதை சிந்திக்க, இந்த இறுதி நாள் நல்லதொரு தருணம் என்று கூறினார். எவ்வித விளம்பரம் இன்றி, இவ்வுலகில் பல்லாயிரம் பேர், தங்கள் உதவிக்கரத்தை நீட்டியதையும், பாரங்களால் துன்புற்றோரின் பாரங்களைக் குறைக்க முயற்சிகள் மேற்கொண்டதையும், திருத்தந்தை, தன் உரையில் குறிப்பிட்டு, அவர்களுக்கு நன்றி கூறினார். இவர்களில் குறிப்பாக, மருத்துவத் துறையினர், கல்வித் துறையினர், பொதுப்பணித் துறையினர் ஆகியோரை சிறப்பாகக் குறிப்பிட்டு, தன் நன்றியை தெரிவித்தார் திருத்தந்தை. பதிலுக்கு எதையும் எதிர்பார்க்காமல், இந்த நல்ல உள்ளங்கள் ஆற்றிய பணி, இறைவனின் அருள், சுயநலனை விட கூடுதல் வலிமை பெற்றது என்பதை இவ்வுலகிற்குப் பறைசாற்றுகிறது என்பதை, திருத்தந்தை, தன் சிந்தனையில் பகிர்ந்துகொண்டார். எதிர்காலத்தை நம்பிக்கையோடு நாம் நோக்குவோம் என்று,

தன் சிந்தனையின் இறுதியில் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'Te Deum' நன்றிப் பாடலில் பயன்படுத்தப்படும், "இறைவா உம் கருணை எம்மீது என்றும் நிலைக்கட்டும், ஆண்டவரே நாங்கள் உம்மையே நம்பியுள்ளோம்" என்ற சொற்களுடன் தன் உரையை நிறைவு செய்துள்ளார்.

தமிழக ஆயர் பேரவையின் 2021ம் புத்தாண்டு செய்தி - மேரி தெரேசா - நம் இதயங்களில் நம்பிக்கையும், நம் கண்களில் இலக்குத்தெளிவும், நம் கரங்களில் மற்றவர் கரங்களின் உடனிருப்பும் இருந்தால், புதிய 2021ம் ஆண்டை இனிய ஆண்டாக நம்மால் மாற்ற முடியும் - தமிழக ஆயர்கள். நம் இதயங்களில் நம்பிக்கையும், நம் கண்களில் இலக்குத்தெளிவும், நம் கரங்களில் மற்றவர் கரங்களின் உடனிருப்பும் இருந்தால், புதிய 2021ம் ஆண்டை இனிய ஆண்டாக நம்மால் மாற்றமுடியும் என்று, தமிழக ஆயர்களின் புத்தாண்டு செய்தி கூறுகிறது.



தமிழக ஆயர் பேரவையின் தலைவரான, மதுரை பேராயர் அந்தோனி பாப்புசாமி அவர்கள், தமிழக ஆயர்கள் சார்பாக வெளியிட்டுள்ள புத்தாண்டு செய்தியில், இந்த 2021ம் ஆண்டு முழுவதும் நாம் கைக்கொள்ள வேண்டிய இரு நற்புண்புகளாக, தனிநபர் வாழ்வியல் நெறியாளுகை, சமுதாயக் கூட்டுப்பொறுப்புணர்வு ஆகிய இரண்டையும் ஏற்போம் என்று கேட்டுக்கொண்டுள்ளார். தனிநபர் வாழ்வியல் நெறியாளுகையில், நாம் நம்முடைய கடந்த காலத்தின் பின்புலத்தில், வருங்காலத்திற்கு திட்டங்களை வரையறுத்து வடிவமைக்க முடியும் என்றும், சமுதாயக் கூட்டுப்பொறுப்புணர்வின் வழியாக, ஒருவர் மற்றவருடன் இணைந்து செயலாற்றமுடியும் என்றும், பேராயர் அந்தோனி பாப்புசாமி அவர்களின் செய்தி கூறுகிறது. நம் கரங்கள், நமக்கு அடுத்திருப்பவரின் கரங்களையும், நம் இருவரின் கரங்களும் இணைந்து, கடவுளின் கரங்களையும் பற்றிக்கொண்டால், 2021ம் ஆண்டில் நாம் மேற்கொள்ளும் வாழ்வுப் பயணம் இனிதாக அமையும், ஏனெனில் தனியாக இருந்து எவரும் எதையும் சாதிப்பதில்லை என்றும், பேராயரின் புத்தாண்டு செய்தி கூறுகிறது. பெருந்தொற்று, இயற்கைப் பேரிடர், பொருளாதாரத் தேக்கநிலை, வேலையின்மை போன்ற பல்வேறு சோகத்தின் சுவடுகளை, 2020ம் ஆண்டு, நம்மிலும், இந்த உலகம் எங்கிலும் விட்டுச் சென்றாலும், நம் கரங்கள் இணைந்தால், மானுடம் வெல்லும் என்ற வாழ்வியல் பாடத்தையும், அது கற்றுத்தந்துள்ளது என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. குறைவானவற்றைக்கொண்டு நிறைவாக வாழ்தல், தனிநபர் நலவாழ்வைப் பேணுதல், புதியத் தொழில்முறைகளை உருவாக்குதல், கூட்டுமுயற்சியுடன் செயலாற்றுதல் போன்ற, பல நேர்முகமான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ள 2020ம் ஆண்டுக்கு விடைகொடுத்து, 2021ம் ஆண்டில் நாம் நுழைந்துள்ளோம் என்றும், தமிழக ஆயர் பேரவை தலைவரின் புத்தாண்டு செய்தி கூறுகின்றது. (Ind.Sec/Tamil)

மகிழ்வின் மந்திரம் - குடும்பம் அமைக்கும் ஆர்வம் - ஜெரோம் லூயிஸ் - "திருமணம் புரிந்து, குடும்பம் அமைக்கும் ஆர்வம், இன்றும், இளையோரிடையே இருப்பது, திருஅவைக்கு ஓர் உந்துசக்தியாக அமைந்துள்ளது." (அன்பின் மகிழ்வு 1) குடும்பத்தில் அன்பு என்ற எண்ணத்தைக் குறித்து, ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், துறவியர், கிறிஸ்தவ மணத்தம்பதியர், மற்றும், அனைத்து பொதுநிலையினருக்கும், 'அன்பின் மகிழ்வு' திருத்தூது அறிவுரை மடலை, தான் எழுதுவதாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மடலின் துவக்கத்தில் கூறியுள்ளார்.



இளம் தம்பதியரின் திருமணத் திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் - கோப்புப் படம் 2018 (Archivio Personale di Letícia Schafer)

"குடும்பங்களில் உய்த்துணரப்படும் அன்பின் மகிழ்வே திருஅவையின் மகிழ்வாக உள்ளது" என்ற சொற்கள், இம்மடலின் அறிமுக சொற்களாக அமைந்துள்ளன. "திருமணம் புரிந்து, குடும்பம் அமைக்கும் ஆர்வம், இன்றும், இளையோரிடையே இருப்பது, திருஅவைக்கு ஓர் உந்துசக்தியாக அமைந்துள்ளது. குடும்பம் நற்செய்தியே என்பதை பறைசாற்றுவதே, இந்த ஆர்வத்திற்கு நாம் வழங்கக்கூடிய கிறிஸ்தவ பதிலிறுப்பு" (அன்பின் மகிழ்வு 1) குடும்ப வாழ்வு குலைந்துவருவதாக பலரும் கூறிவரும் இன்றைய உலகில், இத்தகைய மகிழ்வான, நேர்மறை உணர்வு நிறைந்த சொற்களுடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மடலை அறிமுகப்படுத்தியிருப்பது, குடும்ப வாழ்வைக் குறித்து, நம் நம்பிக்கையைப் புதுப்பிக்கிறது. 'அன்பின் மகிழ்வு' என்ற ஆழ்கடலில் மகிழ்வுடன் மூழ்கி முத்தெடுப்போம், இனிவரும் நாள்களில்!

"எல்லாருக்கும் உடல், உள்ள சுகம்தரும் ஆண்டாக அமையவதாக" பாளை ஆயர் அந்தோணிசாமி வாழ்வின் அர்த்தம் என்பது, எந்தச் சூழ்நிலையிலும் வாழப் பழகிக்கொள்வது, மனநிறைவோடு இருப்பதாகும். வத்திக்கான் வானொலியின் அன்பு

இதயங்கள் அனைவருக்கும் மலரவிருக்கும் ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். புதிய 2021ம் ஆங்கில ஆண்டு உலகினர் எல்லாருக்கும் உடல், உள்ள சுகம்தரும் ஆண்டாக அமையவதாக. கோவிட்-19 பெருந்தொற்று உருவாக்கியுள்ள நெருக்கடிகளில் 2020ம் ஆண்டை செலவழித்துள்ள நமக்கு, 2021ம் ஆங்கில ஆண்டுக்கென, புத்துயிரூட்டும் செய்தியை வழங்குகிறார், பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர் மேன்மைமிகு அந்தோனிசாமி சவரிமுத்து அவர்கள். வாழ்க்கை என்பது மகிழ்ச்சியாக இருப்பதையும் தாண்டியது. சொந்தம் கொள்கிற உணர்விலும், நம்மில் புதைந்திருக்கின்ற நல்ல குணங்களை வளப்படுத்துவதிலும், வாழ்வின் அர்த்தம் அடங்கியுள்ளது. வாழ்வில் மகிழ்ச்சியைத் தேடுவோரைவிட, அர்த்தத்தைத் தேடுவோரே வாழ்வில் சிறந்து விளங்குகின்றார்.

பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர் மேன்மைமிகு அந்தோனிசாமி அவர்கள்

அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ...

1. பிறரோடு சொந்தம் கொள்வது,
2. வாழ்வின் நோக்கத்தைக் கண்டுணர்வது (எதை விரும்புகிறோம் என்பதைவிட எதைக் கொடுக்கிறோம் என்பது முக்கியம்)
3. கடந்து செல்லுதல்
4. நம் வாழ்வு பற்றி கதை சொல்லுதல்

மொத்தத்தில் வாழ்வின் அர்த்தம் என்பது, எந்தச் சூழ்நிலையிலும் வாழப் பழகிக்கொள்வது, மனநிறைவோடு இருப்பதாகும்.

மறை உரை : ஒளி - பார்த்தலும் பதிலிறுத்தலும் அருள்பணி முனைவர் இயேசு கருணாநிதி

ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா -

I. எசாயா 60:1-6
II. எபேசியர் 3:2-3,5-6
III. மத்தேயு 2:1-12

கீழைத்தேய திருஅவைகளின் கிறிஸ்து பிறப்பு விழா என்று சொல்லப்படும் திருக்காட்சிப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். 'பிற இனத்தாருக்கு ஒளியாகிய கிறிஸ்துவில் எமது மீட்பின் மறைபொருளை இன்று வெளிப்படுத்தினீர். சாவுக்கு உரிய எங்களது மனிதத்தன்மையில் அவர் தோன்றியபோது அவருக்கு உரிய சாகாத்தன்மையின் மாட்சியால் எங்களைப் புதுப்பித்தீர்' என்று இன்றைய நாளை இறையியலாக்கம் செய்கிறது திருப்பலியின் தொடக்கவுரை.

லூக்கா நற்செய்தியாளரின் பதிவின்படி இடையர்கள் என்னும் யூதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்திய கிறிஸ்து, இன்று, மத்தேயு நற்செய்தியாளரின் பதிவின்படி ஞானியர் என்னும் புறவினத்தாருக்குத் தம்மை வெளிப்படுத்துகின்றார். இயேசுவின் சமகாலத்தவருக்கு இது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், 'யூதர்களுக்கு மட்டுமே மீட்பு உண்டு. யூதர்கள் மட்டுமே கடவுளால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். யூதர்கள் மட்டுமே தூய்மையானவர்கள். யூதர்களுக்கு மட்டுமே மெசியா' என்று எண்ணிக்கொண்டிருந்த காலத்தில், புறவினத்தாருக்கும் மீட்பு, புறவினத்தாரும் தெரிவுசெய்யப்பட்டவர்கள், புறவினத்தாரும் தூய்மையானவர்கள், அவர்களுக்கும் மெசியா தோன்றுவார் என்று முன்வைக்கப்படும் கருதுகோள் அவ்வளவு ஏற்புடையதாக இருந்திருக்காது. இந்தக் கருதுகோளையே இன்றைய இரண்டாம் வாசகத்தில் (காண். எபே 3:2-3,5-6) நாம் வாசிக்கின்றோம். யூதர்களுக்கு மட்டுமே மீட்பு என்ற எண்ணம் மேலோங்கியிருந்த காலத்தில், பவுல் எபேசுநகர் திருஅவைக்கு எழுதுகின்ற திருமடலில், 'நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும், ஒரே உடலின் உறுப்பினரும், வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள்' என எழுதுகின்றார். இந்த ஒற்றை வரியால்தான் நாம் அனைவரும் கிறிஸ்தவர்களாக இருக்கின்றோம். ஏனெனில், நாம் பிறப்பிலேயே யூதர்கள் அல்லர். ஆக, இன்றைய நாள் நம்முடைய கிறிஸ்து பிறப்பு பெருவிழா.

இன்றைய முதல் வாசகம் (காண். எசா 60:1-6) எசாயா இறைவாக்கினர் நூலின் மூன்றாம் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்ட இஸ்ரயேல் மக்கள் திரும்பி வர அனுமதி பெற்ற காலகட்டத்தில் எழுதப்பட்டது இப்பகுதி. இன்றைய வாசகப் பகுதியில், 'எழு! உலகிற்கு ஒளி வீசு!' என்று எருசலேமைத் தூண்டி எழுப்புகிறார் எசாயா. ஏனெனில், 'உன் ஒளி தோன்றியுள்ளது,' 'ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது.' ஒளியும் மாட்சியும் ஆண்டவரின் காணக்கூடிய வெளிப்பாடுகள் (காண். எசே 1:4, விப 24:15-17). இவ்வாறாக, இருளடைந்து பாழடைந்து கேட்பாரற்றுக் கிடந்த நகரம் கடவுள் வந்ததால் ஒளிர்கிறது. இவர்கள் அடிமைகளாக்கப்படும் முன் இருந்த ஒளி அடிமைத்தனத்தால் இருண்டு

போனது. இப்போது நகரம் ஒளிருமாறு மக்களைக் கவ்வியிருந்த இருளை அகற்றுகிறார் கடவுள். கடவுள் வந்ததை ஒரு பெரிய ஒருங்கிணைவாக முன்வைக்கிறார் எசாயா: (அ) பிற இனத்தார் எருசலேம் நோக்கி வருவர், (ஆ) நாடுகடத்தப்பட்ட, இழுத்துச் செல்லப்பட்ட புதல்வர், புதல்வியர் தோளில் தூக்கிவரப்படுவர், (இ) கடலின் திரள் செல்வம், சொத்துக்கள், ஒட்டகத்தின் பெருந்திரள் எருசலேம் வரும், (உ) 'பொன்' (அரசனுக்கு), 'நறுமணப்பொருள்' (கடவுளுக்கு) ஏந்தி வருவர் மக்கள். இவ்வாறாக, கடவுளே அரசனாகவும் இருப்பார் என்பது குறிக்கப்படுகிறது. இக்கடவுள் எருசலேமிற்கு மட்டும் கடவுள் அல்ல. மாறாக, அனைத்து நாடுகளுக்கும் கடவுளாகவும் அரசனாகவும் இருப்பார்.

இன்றைய நற்செய்தி வாசகம் (காண். மத் 2:1-2) 'ஞானிகள் வருகை' பற்றிப் பேசுகின்றது. நமக்கு மிகவும் தெரிந்த வாசகப் பகுதிதான். இவர்கள் ஏன் வர வேண்டும்? இவர்கள் இறையியல் தேவையையும், இலக்கியத் தேவையையும் நிறைவு செய்ய வருகின்றனர். 'இயேசுவை புதிய மோசே' என்ற இறையியலாக்கம் செய்ய விரும்புகிறார் மத்தேயு. ஆக, பாலன் இயேசுவை எகிப்திற்கு அனுப்பினால்தான் அவரை அங்கிருந்து அழைத்து வர முடியும். இப்போது திருக்குடும்பம் இருப்பது பெத்லகேமில். பெத்லகேமில் நடக்கும் இலக்கிய நிகழ்வு எகிப்துக்கு நகர்ந்தால்தான் இறையியல் சாத்தியமாகும். எனவே, குழந்தையை எகிப்திற்கு அனுப்ப வேண்டியதன் இறையியல் மற்றும் இலக்கியத் தேவையை நிறைவு செய்ய வருகின்றனர் 'ஞானிகள்.'

இவர்கள் யார்? இவர்கள் 'ஞானியரோ,' 'அரசர்களோ' அல்லர். இவர்களை, பிரிவினை சபை சகோதரர்களின் விவிலியம், 'சாஸ்திரிகள்' என சரியாக மொழிபெயர்க்கிறது. இவர்கள் வானியல் பண்டிதர்கள். நட்சத்திரங்களையும், அவற்றின் நகர்வுகளையும், பறவைகள் மற்றும் விலங்குக் கூட்டங்களின் இடம் பெயர்தலையும் வைத்த வருங்காலத்தைக் கணிக்கத் தெரிந்தவர்கள். அவ்வளவுதான்! ஏனெனில், இவர்கள் அரசர்களாக இருந்திருந்தால், 'நீங்கள் போய்ப் பாருங்கள்' என்று ஏரோது அரசன் இவர்களை அனுப்பியிருக்க மாட்டான். 'நீங்கள் இங்கே தங்கி இளைப்பாறுங்கள். நான் காவலாளிகளை அனுப்பி விசாரிக்கிறேன்' என்று இவர்களை அரண்மனையில் அமர்;த்தியிருப்பான். மேலும், இவர்கள் மூன்று பேர் அல்லர். இவர்கள் கொண்டு வந்த காணிக்கைப் பொருள்களை வைத்து நாம் 'மூன்று நபர்கள்' வந்ததாகச் சொல்கிறோம். நம் நிகழ்வின்படி அவர்கள் அரண்மனைக்குத்தான் செல்கிறார்கள். ஏனெனில், இத்தகையோரின் சேவை அரசர்கள் எதிர்காலத்தைக் கணிப்பதற்கு அவர்களுக்கு உதவியாக இருந்தது. ஆகவேதான், இவர்கள் அரசனிடம் செல்கிறார்கள். மேலும், இவர்கள் எதையும் மூடி மறைக்காத, அதே நேரத்தில், துணிச்சல் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

'அவரது விண்மீன் எழக் கண்டோம்' - இதுதான் அவர்கள் பெற்றிருந்த அடையாளம். ஏரோது தன் குள்ளநரித்தனத்தால், 'நீங்கள் சென்று குழந்தையைக் குறித்து திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று குழந்தையை வணங்குவேன்' என்று சொல்லி அவர்களை அனுப்பிவைக்கின்றான்.

அந்த நேரத்தில்தான் இரண்டாம் முறை அந்த விண்மீன் தோன்றுகின்றது. அரண்மனையின் உயரமான சுவர்கள் அதை மறைத்ததா? அல்லது ஏரோதின்முன் இவர்கள் மண்டியிட்டதால் விண்மீன் இவர்களுக்கு மறைவாயிருந்ததா? - தெரியவில்லை நமக்கு. ஆனால், 'அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.' மத்தேயு முதல் முறையாக அவர்களின் மகிழ்ச்சி என்ற உணர்வைப் பதிவு செய்கின்றார். வீட்டிற்குள் செல்லும் அவர்கள் குழந்தைக்கு தங்கம் (அரச நிலையின் அடையாளம்), தூபம் (இறை நிலையின் அடையாளம்), வெள்ளைப் போளம் (மனித நிலையின் அடையாளம்)

பரிசளிக்கின்றனர். கனவில் எச்சரிக்கப்பட்டு வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்புகிறார்கள்.

இன்றைய முதல் வாசகத்தில், எருசலேம் நகரம் ஒளி வீசுகிறது. அதைக் காணுகின்ற இஸ்ரயேல் மக்களும், புறவினத்து மக்களும் பதிலிறுப்பு செய்கின்றனர். அவர்களது பதிலிறுப்பு திரும்பி வருதலில் இருக்கின்றது. இரண்டாம் வாசகத்தில், 'ஒரு காலத்தில் இருளாய் இருந்த எபேசு நகர மக்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறார்கள். அவர்கள் ஒளிபெற்ற மக்களாக வாழ வேண்டும்' (காண். எபே 5:8). புறவினத்தாருக்கு கிறிஸ்துவின் மீட்பு என்னும் ஒளி வழங்கப்பட, அவர்களும் அதற்குப் பதிலிறுப்பு செய்கின்றனர். நற்செய்தி வாசகத்தில், ஒளியைக் காணுகின்ற கீழ்த்திசை ஞானியர், அந்த ஒளியைப் பின்தொடர்ந்து வந்து, ஒளியாம் கிறிஸ்துவைக் கண்டுகொள்கின்றனர்.

ஒளியைப் பார்த்தலும் பதிலிறுத்தலும் நமக்குத் தரும் வாழ்வியல் பாடங்கள் எவை?

1. இருவகைக் காணுதல் - கீழ்த்திசை ஞானியரின் ஞானம் நமக்கு ஆச்சர்யத்தைத் தருகிறது. ஏன்? அவர்கள் தங்களுக்கு வெளியே இருக்கின்ற விண்மீனின் ஒளியைக் காண்கின்றனர். அதே வேளையில், தங்கள் கனவில் வெளிப்படுத்தப்பட்ட ஒளியைக் கண்டு, வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்புகின்றனர். ஆக, தங்களுக்கு வெளியே நடப்பது பற்றிய அறிவும், தங்களுக்கு உள்ளே இருக்கின்ற உள்ளுணர்வு பற்றிய அறிவும் அவர்களுக்கு ஒருங்கே அமைந்திருந்தது. இதுதான் ஞானம். பல நேரங்களில் அறிவார்ந்த பலர் தங்களுக்கு வெளியே நடக்கும் நிகழ்வுகள் பற்றித் தெளிவாக இருப்பர். ஆனால், அவர்கள் தங்கள் உள்ளங்களில் வீசும் ஒளியைக் கண்டுகொள்ள மறந்துவிடுவர். சீராக்கின் ஞானநூல் ஆசிரியர் உள்ளத்தின் ஒளி பற்றி இப்படி எழுதுகிறார்: 'உன் உள்ளத்தின் அறிவுரையில் உறுதியாய் நில். அதைவிட நம்பத்தக்கது உனக்கு வேறெதுவுமில்லை. காவல் மாடத்தின்மேல் அமர்ந்திருக்கும் ஏழு காவலர்களைவிட மனித உள்ளம் சில வேளைகளில் நன்கு அறிவுறுத்துகின்றது ... உன்னத இறைவனிடம் மன்றாடு. அப்பொழுது அவர் உன்னை உண்மையின் வழியில் நடத்துவார்' (சீஞா 37:13-15). இன்றைய திருநாளின் ஞானியர் தங்கள் உள்ளத்தின் அறிவுரையை ஏற்றனர். அதற்கேற்ற பதிலிறுப்பு செய்தனர். இன்று நாம் புறக்காணுதல் மற்றும் அகக் காணுதல் நிலைகளில் எப்படி இருக்கிறோம்?

2. மூவகை பதிலிறுப்புகள் - ஏரோது ஒளியைக் கண்டு அஞ்சுகிறார், எருசலேம் நகரத்தவர் ஒளியைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர், ஞானியர் ஒளியைப் பின்தொடர்கின்றனர். ஒளி அல்லது உண்மை பல நேரங்களில் நமக்கு அச்சத்தை விளைவிக்கலாம். நம்மில் சிலர் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் மருத்தவரிடம் செல்வதைத் தவிர்ப்போம். ஏனெனில், நம்மிடம் உள்ள நோயை மருத்துவர் கண்டுபிடித்துவிட்டால், அல்லது நம் நோய் பற்றிய உண்மைநிலை நமக்குத் தெரிந்து விட்டால், அதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. மக்கள் ஒளியைக் கண்டு அஞ்சுவதை இயேசுவும் நிக்கதேமிடம் சொல்கின்றார்: 'ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர் ... தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள்' (காண். யோவா 3:19-21). ஏரோதுவின் அரியணை ஒளியை அவரிடமிருந்து மறைத்தது. எருசலேம் நகர மக்கள் ஒளியைக் கண்டனர். ஆனால், அன்றாட கவலைகளுக்கே அவர்களுக்கு நேரம் சரியாக இருந்ததால் அவர்கள் ஒளியைக் கண்டுகொள்ளவில்லை. தங்கள் வாழ்வின் இன்ப துன்பங்களிலிருந்து எழுந்து பார்க்கவோ, அந்த ஒளியைப் பின்பற்றவோ

அவர்களுக்குத் தோன்றவில்லை. சில வேளைகளில் நமக்கும் இதே மனநிலை வரலாம். 'பின்னர் பார்த்துக்கொள்ளலாம்!' என்று தள்ளிப் போடலாம். ஆனால், ஞானியர் உடனடியாகப் பதிலிறுப்பு செய்கின்றனர். ஒளியைப் பின்தொடர்தல் கடினமாக இருந்தாலும் பின் தொடர்கின்றனர். ஏனெனில், அவர்களுடைய பயணம் பெரும்பாலும் இரவில்தான் நடந்திருக்கும்.

3. இரண்டாம் முறை விண்மீன் - நம் பாதையும் பதிலிறுப்பும் தெளிவாக இருந்தால், நாம் தீயவனின் அரண்மனையில் இருந்தாலும் விண்மீன் மீண்டும் தோன்றும். விண்மீன் இரண்டாம் முறை தோன்றுவதைக் கண்ட ஞானியர் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றனர். தங்களின் பயணமும் பாதையும் சரியானது என்பது உறுதி செய்யப்பட்டதன் அடையாளமாக அதைக் காண்கின்றனர். நாம் நம் கனவுகள் நோக்கிச் செல்லும்போது ஒட்டுமொத்த பிரபஞ்சமும் நம்முடன் சேர்ந்து ஒத்துழைக்கிறது என்ற இரசவாதமும் (காண். பவுலோ கோயலோ, தி ஆல்கெமிஸ்ட்) இதுவே. இன்று நம் இலக்குகள் அல்லது நட்சத்திரங்கள் நோக்கி நாம் வழிநடக்கும்போது இதே அனுபவத்தை நாமும் பெற்றிருக்கலாம். அப்படி இருக்க நம் இலக்குகளை நோக்கி நகர்வதிலிருந்து நாம் பின்வாங்குவது ஏன்?

இறுதியாக, 'அவர் காலத்தில் நீதி தழைத்தோங்குவதாக. நிலா உள்ள வரையில் மிகுந்த சமாதானம் நிலவுவதாக!' எனப் பாடுகின்றார் திபா ஆசிரியர் (காண். 72). நிலவின், கதிரவனின், விண்மீனின் ஒளி உள்ளவரை அதைப் பார்த்தலும், அதற்குப் பதிலிறுத்தலும் தொடரும். பாதையிலும் பாதையின் இறுதியிலும் நம் கண்கள் அவரைக் காணும். திருக்காட்சிப் பெருவிழா நல்வாழ்த்துகள்! http://aniccam.blogspot.com/2021/01/blog-post_2.html?utm_source=feedburner&utm_medium=email&utm_campaign=Feed%3A+blogspot%2FHBWrU+%28%E0%AE%87%E0%AE%A9%E0%AE%BF+%E0%AE%8E%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%8D+%E0%AE%9A%E0%AF%81%E0%AE%95%E0%AE%AE%E0%AF%87%21%29

தொடர்புக்கு : அருள்திரு. யேசு கருணாநிதி, மதுரை உயர்மறைமாவட்டம், இணைப் பேராசிரியர், புனித பவுல் அருள்பணிப் பயிற்சியகம்,
திருச்சிராப்பள்ளி 620 001, அழைக்க 948 948 21 21

திருஅவை : அமைதியைக் கண்டுகொள்ள, தன்னலப்போக்குகளை கைவிடுக - கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - கர்தினால் சாக்கோ - துன்ப காலங்களில், அன்பு, அமைதி, மற்றும், ஒன்றிணைந்து வாழ்தலின் கலாச்சாரத்தை ஊக்குவிக்கவேண்டியது மதங்களின் கடமை. கொரோனா பெருந்தொற்றாலும், பல்வேறு துன்ப நிலைகளாலும், போர்களாலும் துவண்டு போயிருக்கும் ஈராக் நாட்டில், 2021ல் இடம்பெற உள்ள திருத்தந்தையின் திருத்தூதுப்பயணம், வன்முறையற்ற நாடாக, ஒரு புதிய நாடாக ஈராக் நாடு உருவாக உதவும் என்ற நம்பிக்கையை வெளியிட்டுள்ளார், ஈராக் கர்தினால் லூயிஸ் இரபேல் சாக்கோ.



ஈராக் கர்தினால் லூயிஸ் இரபேல் சாக்கோ

ஈராக் நாட்டு கிறிஸ்தவர்களுக்கென புத்தாண்டு செய்தி ஒன்றை வெளியிட்ட, கல்தேய வழிபாட்டுமுறை முதுபெரும்தந்தை, கர்தினால் சாக்கோ அவர்கள், துன்ப காலங்களில், அன்பு, அமைதி, மற்றும் ஒன்றிணைந்து வாழ்தலின் கலாச்சாரத்தை ஊக்குவிக்கவேண்டியது மதங்களின் கடமை என்பதை, தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார். ஈராக் ஒரு புதிய நாடாக உருவெடுப்பதற்கு திருத்தந்தையின் இவ்வாண்டு திருத்தூதுப்பணம் பெரிய அளவில் உதவுவதாக இருக்கும் என்று தன் செய்தியில் கூறியுள்ள கர்தினால் சாக்கோ அவர்கள், மக்களுக்குப் பணியாற்ற வேண்டிய கடமையை மறந்து, அதிகாரம், மற்றும், பணத்தின் பின்னே ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய உலகம், அமைதியைக் கண்டுகொள்ளவேண்டுமெனில், தன்னலப்போக்குகளைக் கைவிடவேண்டும் என தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார். அமைதியின்றி வளர்ச்சியும் வாழ்வும் இல்லை என்பதை உணர்ந்தவர்களாக அனைவரும், ஒன்றிணைந்த வாழ்வு, சகிப்புத்தன்மை, வன்முறையற்ற நிலை, ஒருமைப்பாடு ஆகியவைகளின் மதிப்பீடுகளை உணர்ந்து செயல்பட அழைப்பு விடுக்கும் கர்தினால் சாக்கோ அவர்கள், இத்தகைய ஒரு சூழலை உருவாக்கிக் கொடுப்பதில் மதங்கள், மற்றும், அரசுகளின் கடமையை வலியுறுத்தியுள்ளார். ஈராக், மத்தியக் கிழக்கு நாடுகள், மற்றும், உலக மக்களின் இதயங்களில் அமைதி நிலவுவதற்கு அனைவரும் செபிப்போம் என்ற அழைப்பையும் விடுத்த கர்தினால் சாக்கோ அவர்கள், பகைமை மற்றும் வன்முறைகளின் சுவர்கள் முற்றிலுமாக வீழ்த்தப்பட்ட வேண்டும் எனவும், திருத்தந்தையின் திருத்தூதுப்பயணம் ஈராக் நாட்டில் வெற்றியடைய செபிக்குமாறும், தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார். (AsiaNews)

பெருந்தொற்று மட்டுமல்ல, பாகுபாட்டு நிலைகளும், கொல்கின்றன - கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - நோய்க்கு தடுப்பூசிபோல், பாகுபாட்டு நிலைகளையும், ஏழ்மையையும் களைய அறுவை சிகிச்சைத் தேவைப் படுகின்றது. உலகில் 12

கோடியே 20 இலட்சம் மக்கள் பசியால் வாடியது, உலக மக்கள் அனைவரையும் ஒரு பெருந்தொற்று தாக்கியது, என 2020ம் ஆண்டு தந்த சவால்களை பின்னுக்குத் தள்ளி, நம்பிக்கையுடன் புதிய ஆண்டில் நடைபோடுவோம் என மியான்மார் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் அந்நாட்டு கர்தினால் சார்லஸ் மாங் போ.



கர்தினால் சார்லஸ் மாங் போ

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில், மக்களின் ஒருமைப்பாட்டுணர்வு அதிக அளவில் வெளிப்பட்டு, உதவிகள் எதிர்பார்த்ததைவிட பெரிய அளவில் கிடைத்தது குறித்தும் மகிழ்ச்சியை வெளியிட்ட கர்தினால் போ அவர்கள், மிகக் குறுகிய காலத்தில் இந்நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதும், புதிய நம்பிக்கைகளை விதைப்பதாக உள்ளது என தன் புத்தாண்டு செய்தியில் கூறியுள்ளார். இயற்கை நம்மை தாக்கியபோதெல்லாம் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒருவருக்கொருவர் உதவியுள்ளோம் என்பதை சுட்டிக்காட்டிய கர்தினால் போ அவர்கள், இப்பெருந்தொற்று காலத்தில் நலப்பணியாளர்களின் சேவை மிகவும் பாராட்டுக்குரியது என தன் செய்தியில் கூறியுள்ளார்.

கோவிட்-19 பெருந்தொற்று காலம், சமுதாயத்தில் நிலவும் அநீதியான சூழல்களை படம்பிடித்துக் காட்டி யுள்ளது எனக்கூறும் மியான்மார் கர்தினாலின் செய்தி, பெருந்தொற்று மட்டுமல்ல, பாகுபாட்டு நிலைகளும், ஏழ்மையும் மக்களைக் கொல்கின்றன என்பதால், நோய்க்கு தடுப்பூசிபோல், பாகுபாட்டு நிலைகளையும், ஏழ்மையையும் களைய அறுவை சிகிச்சையொன்று தேவைப்படுகின்றது, என மேலும் உரைக்கின்றது.
சமூக ஒழுங்கமைவுகளில் காணப்படும் சீர்கேடுகளை ஒரு சவாலாக பார்க்கும் அதேவேளை, அவைகளை சமுதாய சீர்திருத்தத்தைக் கொணர்வதற்கான வாய்ப்பாகவும் நோக்கவேண்டும் எனவும், தன் புத்தாண்டு செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார் கர்தினால் போ.

இன்று மியான்மாரில் நிலவும் பெருந்தொற்று, கோவிட்-19 மட்டுமல்ல, உள்நாட்டு மோதல்கள், எழுபது ஆண்டுகளாக மக்கள் குடிபெயர்ந்திருக்கும் நிலை, இளையோர் குடிபெயர்தல், நவீன அடிமைத்தனம் என, பல்வேறு பெருந்தொற்றுகள் உள்ளன, அவை சீர்செய்யப்பட்ட வேண்டியுள்ளது என உரைக்கும் கர்தினால் போ அவர்கள், காயப்பட்டுள்ள வரலாற்றிலிருந்து இந்த பெருந்தொற்றுகளை அப்புறப்படுத்த உழைக்க வேண்டியது அனைவரின் கடமை எனவும் விண்ணப்பித்துள்ளார். பல ஆண்டுகளாக சுரண்டப்படுவதாலும், முறையற்ற பொருளாதார நடவடிக்கைகளாலும், மியான்மார் மக்கள் துன்பங்களை அனுபவித்துவரும் நிலைகள் மாற்றப்பட்டு, பொருளாதார, மற்றும், சுற்றுச்சூழல் நீதியை அடிப்படையாகக்கொண்ட அமைதி, நாட்டில் நிலவவேண்டும் என அனைவரும் ஒன்றிணைந்து கனவுகாண்போம் என, தன் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில், மேலும் அழைப்பு விடுத்துள்ளார் கர்தினால் போ. (UCAN)

மகளிர் நலம் : பெண்களுக்கு பாலியல் சுகாதாரம் குறித்த புரிதல் இல்லை! - சொல்கிறார் க்ளோரி டெபோரா இந்து தமிழ் திசை - பால்வினை தொற்று நோய்கள் உலக அளவில் பொது சுகாதாரத்துக்குச் சவாலாக நிற்கின்றன. இது ஒரு தனி மனிதனின் உடல், மனம், மற்றும் சமூக நிலையைப் பொறுத்தது என்கிறது உலக சுகாதார நிறுவனம். பாலியல் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் பால்வினை நோய்ப் பரவல் உள்ளிட்டவற்றைத் தடுக்கும் நோக்கிலும் செப்டம்பர் 4-ம் தேதி சர்வதேச பாலியல் சுகாதார தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

க்ளோரி டெபோரா

பெரும்பாலும் ஆண்களை விட பெண்களே பாலியல் நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இதற்குக் காரணம், பெண்களுக்குப் பாலியல் குறித்த சரியான புரிதலும் விழிப்புணர்வும் இல்லாததே. என்னதான் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் அனைத்துத் துறைகளிலும் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறினாலும் பாலியல் கல்வி என்று வரும்போது இந்தியப் பெண்கள் பல மைல் தூரம் பின்தங்கியே நிற்கிறார்கள். இதற்குக் காரணம், அவர்களது வாழ்வியல் சூழல்.

சராசரி பெண்கள் மத்தியில் பாலியல் சுகாதாரம் குறித்து உரிய விழிப்புணர்வை தருவதற்கு தன்னார்வ அமைப்புகளுடன் சேர்ந்து அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதேநேரம், பாலியலைத் தொழிலாகக் கொண்டிருக்கும் பெண்கள் மத்தியில் பாலியல் சுகாதாரம் குறித்தும் பாலியல் நோய்களில் இருந்து அவர்கள் தங்களை தற்காத்துக் கொள்ளவும் தொடர்ந்து சேவையாற்றி வருகிறது 'தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்'. இருப்பினும் இன்னும்கூட பெண்களுக்குப் பாலியல் சுகாதாரம் குறித்த சரியான புரிதல் இல்லை என்கிறார் க்ளோரி டெபோரா.

மதுரையில் 'நியூ கிரியேஷன்ஸ் டிரஸ்ட்' என்ற தன்னார்வ அமைப்பை நடத்தி வரும் சி.க்ளோரி டெபோரா மதுரை மாவட்டத்தில் பாலியல் தொழிலில் இருக்கும்

பெண்களுக்குப் பாலியல் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வூட்டி வருகிறார். பாலியல் தொழிலில் இருக்கும் பெண்களை அதிலிருந்து மீட்டு அவர்களுக்கு புது வாழ்க்கை அமைத்துக் கொடுப்பது, ஹெச்ஐவி உள்ளிட்ட பாலியல் நோய்க்கு ஆளாகும் பெண்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கும் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார் க்ளோரி.

காப்பகத்தில் உள்ள பெண்ணுக்கு முடி திருத்தம் செய்யும் க்ளோரி டெபோரா

பெண்கள் மத்தியில் உள்ள பாலியல் சுகாதார விழிப்புணர்வு குறித்து நம்மிடம் பேசினார் க்ளோரி. "மதுரை மாவட்டத்தில் மட்டும் 6,000 பெண்கள் பாலியல் தொழிலில் இருப்பதாக தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தில் பதிவு இருக்கிறது. பொதுவாக, ஹெச்ஐவி பாசிட்டிவ் ஆனவர்களுக்காக எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் பணி செய்கிறது. பாலியல் தொழிலில் ஈடுபட்டு அதனால் ஹெச்ஐவி நோய்க்கு ஆளாகி அதனால் மனநலம் பாதிக்கப்பட்ட, கைவிடப்பட்ட பெண்களுக்காக நாங்கள் பணி செய்கிறோம்.

இந்தக் கரோனா காலத்தில், பிழைப்புக்கு வேறு எந்த வழியும் இல்லாமல் பாலியல் தொழிலை மட்டுமே நம்பி இருந்த பலரும் தெருவுக்கு வந்துவிட்டார்கள். பொதுவாக, ஹெச்ஐவி பாதித்தவர்கள் பாலியல் தொழில் செய்யக்கூடாது என அரசும் எங்களைப் போன்ற தன்னார்வ அமைப்புகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இதற்காக அவர்களது குடும்பத்துக்குத் தேவையான உதவிகள், ஊட்டச்சத்து உணவுகள், அவர்களது குழந்தைகளின் கல்விக்கான உதவி உள்ளிட்டவற்றைச் செய்கிறோம். இதுதான் நம்மால் அவர்களுக்குச் செய்ய முடியும். மற்றபடி கையில் காசைக்

கொடுத்து அவர்களைக் கைதூக்கிவிட முடியாது. ஆனால், இந்தத் தொழிலில் இருக்கும் பெண்கள் தங்களது பாதையை மாற்றிக்கொள்ள நினைத்தாலும் அவர்களது வாடிக்கையாளர்கள் விடுவதில்லை. 'நீ என்ன பெரிய யோக்கியமா... இத்தனை வருசம் இப்படி இருந்துட்டு இப்ப மட்டும் என்ன வந்தது உனக்கு?' என்று நெருக்கடி கொடுக்கிறார்கள்.

பாலியல் தொழிலில் இருக்கும் பெண்களுக்கு ரெகுலர் பார்ட்னர் இருப்பார்கள், சிலருக்கு லிவிங் பார்ட்னர்கள் இருப்பார்கள். தனக்கு ஹெச்ஐவி இருக்கும் விஷயத்தைத் தங்களது பார்ட்னர்களுக்கோ வாடிக்கையாளர்களுக்கோ அநேகம் பெண்கள் சொல்வதில்லை. தனக்குள்ளே நோயை வைத்துக் கொண்டு மேலும் மேலும் பாலியல் தொழிலில் ஈடுபடுவதால் பெண்கள் மனதாலும் உடலாலும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

அப்படி பாதிக்கப்பட்டு சமூகத்தால் ஒதுக்கப்பட்டு மனநோயாளியாக்கப்பட்ட பெண்கள் இப்போது எங்களது காப்பகத்தில் இருக்கிறார்கள். கரோனா காலத்தில் சொத்துப் பிரச்சினை, மனநலம் பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால் ஆண்களும் தெருவுக்குத் துரத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களையும் மீட்டு எங்கள் காப்பகத்தில் வைத்துப் பராமரித்து வருகிறோம். இவர்களில் 23 பேரை போதை மறுவாழ்வு மையத்தில் சேர்த்து அவர்களைப் போதையிலிருந்து மீட்டோம். அதில் 7 பேர் எங்களது சமரச முயற்சியால் மீண்டும் குடும்பத்துடன் சேர்ந்துவிட்டார்கள். எஞ்சியவர்கள் புதுவாழ்க்கைக்குத் திரும்பி கிடைத்த வேலைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். இன்னும் 24 ஆண்கள் எங்களது நியூ கிரியேஷன்ஸ் இல்லத்தில் இருக்கிறார்கள்.

உலக பாலியல் சுகாதார தினத்தில் பெண்கள் மத்தியில் உள்ள பாலியல் கல்வி குறித்து நிறையவே பேச வேண்டி இருக்கிறது. இந்தக் காலத்திலும் பல பெண்கள் இடைவெளி இல்லாமல் அடுத்தடுத்து குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வதற்குப் பெண்கள் தயாராக இல்லை. ஆனால், கருக்கலைப்பு பற்றிய புரிதல் இல்லாமலே அவர்களே அடிக்கடி கருக்கலைப்பு செய்து கொள்கிறார்கள். இதனால் பால்வினை நோய் வரவாய்ப்பிருக்கிறது. கர்ப்பப்பை புற்றுநோய் வரலாம். இது குறித்தெல்லாம் எங்களைப் போன்றவர்கள் தொடர்ந்து விழிப்புணர்வூட்டி வருகிறோம். ஆனால், இதுகுறித்தெல்லாம் பாலியல் தொழிலில் இருக்கும் பெண்களுக்குத் தெரிந்த அளவுகூட குடும்பத்தில் இருக்கும் பெண்களுக்குத் தெரியவில்லை.

பால்வினை நோய் என்பது ஒவ்வொரு பெண்ணும் தெரிந்திருக்க வேண்டிய விஷயம். ஆனால், அது கெட்ட வழியில் போகும் பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயம் என்று மற்ற பெண்கள் ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள். இதனால் பிறப்புறுப்பில் எதனால் சீழ் வடிகிறது என்ற புரிதல்கூட அவர்களுக்கு இருப்பதில்லை. அடிக்கடி கருக்கலைப்பு செய்தால் கர்ப்பப்பை புற்றுநோய் வரலாம். அதனால் பிறப்புறுப்பில் சீழ் வடிய வாய்பிருக்கிறது. பால்வினை நோய்கள் பற்றிய தெளிவு இருந்தால் மட்டுமே இதையெல்லாம் அறிந்து கொள்ள முடியும். ஆனால், மெத்தப் படித்து உத்தியோகத்துக்குப் போகும் பெண்கள்கூட பால்வினை நோய் என்று பேச்செடுத்தால் முகம் சுளிக்கிறார்கள். அந்தப் பேச்சையே அவர்கள் தவிர்க்கிறார்கள்.

இவர்கள் தங்களுக்கு பால்வினை நோய் இருந்தாலும் உடனடியாக மருத்துவரை அணுக மாட்டார்கள். பல பெண்களுக்கு அவர்களது கணவரும் அதற்குத் தடையாக இருப்பார்கள். காரணம், அவர்களுக்கு மனைவியைத் தவிர வேறு சில பார்ட்னர்களும் இருப்பார்கள். இது வெளியில் தெரிந்துவிடும் என நினைத்து, 'இப்படியெல்லாம் சொல்லி உன்னைக் குழப்பிவிடுவது யார்?' என மனைவியை அவர்கள் கேட்க

ஆரம்பித்துவிடுவார்கள். இதனால் குடும்ப உறவில் விரிசல் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தில், அந்தப் பெண்கள் தங்களுக்கு இருக்கும் பால்வினை நோய் குறித்து வெளியில் பேசாமலும் அதற்கு உரிய சிகிச்சை எடுக்காமலும் விட்டுவிடுகிறார்கள்.

இதுகுறித்து ஓரளவுக்கு மட்டுமே நாம் பேசமுடியும். அதற்கு மேல் பேசினால் தனி மனித உரிமையில் தலையிடுவதாக ஆகிவிடும். அதனால் இந்த விஷயத்தில் எங்களைப் போன்ற ஆற்றுப்படுத்துநர்கள் ஒரு எல்லைக்கு மேல் தாண்ட முடியாது. இந்தப் பிரச்சினையின் தாக்கத்தை இருபாலரும் உணர வேண்டுமானால் குழந்தைகளுக்கு 'நோ டச், பேட் டச்' என்று சொல்லிக் கொடுப்பதைப் போல் பாலியல் கல்வி குறித்தும் பள்ளி - கல்லூரிகளில் இரு பாலருக்கும் இன்னும் கூடுதலாகப் போதிக்க வேண்டிய அவசியமும் தேவையும் இருக்கிறது.

மதுரையைப் பொறுத்தவரை, பாலியல் தொழிலில் இருக்கும் பெண்களுக்கு மாற்றுத் தொழில்களை ஏற்பாடு செய்து தருகிறோம். அந்தப் பெண்களை சமையல் வேலைக்கு அனுப்புகிறோம். பூக்கட்டி விற்றல், காய்-கனிகள் விற்றல் உள்ளிட்ட வேலைகளில் ஈடுபடுத்தி அவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதைக் குறைத்து வருகிறோம். இந்த வேலைகளுக்குப் போனாலும் அவ்வப்போது தங்கள் தேவைக்காக அவர்கள் பாலியல் தொழிலுக்கும் போய்க் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், முன்னைப் போல அதிக அளவில் இந்தத் தொழிலில் அவர்கள் ஈடுபடாததால் ஹெச்ஐவி பாதிப்பின் பக்கவிளைவுகளில் இருந்து அவர்களை ஓரளவுக்குக் காக்க முடிகிறது.

நாங்கள் நடத்திய கள ஆய்வின்படி மதுரைக்குள் பல பெண்கள் கந்துவட்டிக்குக் கடன் வாங்கி அதை திருப்பிச் செலுத்த வழி தெரியாமல்தான் பாலியல் தொழிலில் சிக்கி இருக்கிறார்கள். இப்படிச் சிக்கிக்கொண்ட சில பெண்களின் வாழ்க்கை முறையையே நாங்கள் மாற்றி சீர்வரிசையுடன் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம். ஆனால், இதெல்லாம் ஒன்றிரண்டுதான். இந்தத் தொழிலில் இருக்கும் அனைத்துப் பெண்களின் வாழ்க்கையிலும் யாராலும் ஒட்டுமொத்தமாக மறுமலர்ச்சி ஏற்படுத்திவிட முடியாது. நான் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள 2,000 பெண்களுக்கு கவுன்சலிங் கொடுத்திருக்கிறேன். அதில் 5 பேரை மட்டும்தான் என்னால் மாற்று வழிக்குத் திருப்ப முடிந்தது. இன்னும் ஒரு 20 பேர் மோசமான உடல்நலப் பாதிப்பால் வேறு வழியே இல்லாமல் அந்தத் தொழிலை விட்டு விலகினார்கள். இதில் கவலைக்குரிய விஷயம் என்னவென்றால் ஒருபக்கம், பாலியல் தொழிலில் இருப்பவர்களை நல்வழிப்படுத்த நாம் முயன்று கொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கம், ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு இந்தத் தொழிலைத் தேடி கல்லூரி மாணவிகளும் புதிது புதிதாய் வந்துகொண்டே இருக்கிறார்கள்" என்றார். https://www.hindutamil.in/news/blogs/573514-women-lack-of-sexual-hygiene-1.html

குறுநகை : கணவன்மார்களே சொல்லே மந்திரம் - சமூக ஊடகம்
மனைவியிடம் மண்டியிட்டு மன்னிப்பு கேட்டால், அது "யோகா".
மனைவி திட்டுவதை காதில் வாங்கி கொள்ளா விட்டால், அது "தியானம்".
யோகாவும், தியானமும் நம் வாழ்க்கைக்கு ரொம்ப முக்கியம் மக்களே...

Source: Kamil Macniak/Shutterstock

தோளுக்கு மேல வளர்ந்தாச்சு ! "இனி இவனை அடிக்க முடியாதுன்னு" பெத்தவங்க, மகனை அடிக்க இன்னோருத்தியை ஏற்பாடு பண்றது தான் திருமணம்.
மாப்பிள்ளை வீட்டில், "மாப்பிள்ளைக்கு ஒரு தங்கை உண்டு" என்று சொன்னவுடனே, பெண்ணுக்கு லேசா கொஞ்சம் முகம் வாடும். ஆனால், பெண் வீட்டில் "பெண்ணுக்கு, ஒரு தங்கை உண்டு" என்று சொன்னவுடனே மாப்பிள்ளைக்கு ஒரு சந்தோஷம் முகத்தில் பிரகாசிக்கும் பாருங்கள்!

ஆண்களுக்கு எப்பவுமே பரந்த மனசுங்க உங்கள் கணவரை நேசியுங்கள்!
அடிக்கடி டீயோ, காபியோ கேக்குறார் என்றால் உங்கள் நிறுத்தாத பேச்சை புத்துணர்ச்சியுடன் கேட்க விருப்புகிறார் என்று அர்த்தம்.
மற்ற அழகான பெண்களை பார்க்கிறாரா?
என் பொண்டாட்டிய விட அவ என்ன அழகான்னு செக் பண்றார்னு அர்த்தம்.
உங்கள் சமையலை குறை கூறிக்கொண்டே இருக்கிறாரா?
அவரது சுவையறியும் திறன் கூடிக்கொண்டே போகிறது என்று அர்த்தம்.
.இரவில் குறைட்டை விட்டு உங்கள் தூக்கத்தை கெடுக்குறாரா?
உங்களை மணந்தபின் தான் நிம்மதியாக உறங்குகிறார் என்று அர்த்தம்.
உங்கள் பிறந்தநாளுக்கு பரிசு வாங்கி தரவில்லையா?
உங்கள் எதிர்காலத்துக்கு பணம் சேமித்து வைக்கிறார் என்று அர்த்தம்.
நேசித்தே ஆகவேண்டும் உங்களுக்கு வேற வழியும் இல்லை. ஏனென்றால்....., "கணவனை கொல்வது, சட்டப்படி குற்றம்"..!!

மூணு காரணங்களால், மனைவியும் ஒரு திருக்குறள் தான்...!!!
1. நிறைய "அதிகாரம்" இருப்பதால்.
2. நிறைய இடங்களில் "புரிந்தும், புரியாமலும்" இருப்பதால்.
3. இரண்டு "அடி"யில், எல்லாவற்றையும் உணர வைப்பதால்.

இளைஞர் நலம் : மாணவர் அரசியலில் தமிழகம் ஏன் பின்தங்கிப் போனது? இந்து தமிழ் திசை -



Arya Rajendran (HT) **https://www.livemint.com/** கேரளத்தின் இளம்வயது மேயரான திருவனந்தபுரம் ஆர்யா ராஜேந்திரனை அவரது வாடகை வீட்டில் பேட்டி எடுத்துக்கொண்டிருக்கிறார் ஒரு தொலைக்காட்சிச் செய்தியாளர். ஆர்யாவின் வீட்டுக்கு வழக்கமாக வந்துசெல்லும் மீன்காரம்மா அப்போதும் வருகிறார். ‘என் செல்ல மகளே’ என்று அவரது கன்னங்களைத் தடவி வாழ்த்துகிறார். செய்தியாளர் மீன்காரம்மாவையும் விடவில்லை. ‘இவரை எவ்வளவு காலமாக உங்களுக்குத் தெரியும்’ என்ற கேள்வியோடு அவரிடம் மைக்கை நீட்டுகிறார். ‘பத்து வருஷமா தெரியும். இந்தப் பெண்ணை வளர்க்கவும் படிக்கவைக்கவும் இந்தக் குடும்பம் எவ்வளவு கஷ்டப்பட்டது' என்று அவர் சொல்லும்போதே அருகில் நிற்கும் ஆர்யா ராஜேந்திரனுக்கு மட்டுமல்ல,

பார்க்கிற நம் கண்களுக்குள்ளும் நீர் அரும்புகிறது.

21 வயதில் மேயராகிவிட்டார் என்று ஆர்யா ராஜேந்திரனையும் அதே வயதில் ஊராட்சி மன்றத் தலைவராகிவிட்டார் என்று மரியம் ரேஷ்மாவையும் ஊடகங்கள் கொண்டாடுகின்றன. மாநகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே வெற்றி ஊர்வலத்தில் பேசிய ஆர்யா, இது தன்னுடைய வெற்றி என்று மகிழவில்லை. மாறாக தனக்கு முன்பு அந்த வார்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு தோழர்களின் பணியைத் தொடர்வேன் என்றே உறுதியளித்தார். ரேஷ்மா மரியம் அளித்த பேட்டியொன்றில், தனது குடும்பத்தினர்கள் காங்கிரஸ் அனுதாபிகள் என்றும் கல்லூரியில் தான் இடதுசாரி அமைப்புகளை நோக்கி ஈர்க்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். எந்தப் பொருளாதாரப் பின்னணியும் இல்லாத கட்சி அனுதாபி ஒருவரின் மகள், மாநகராட்சி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால், எதிர்க்கட்சி அனுதாபிகளின் மகளும்கூட கட்சிப் பணிகளின் அடிப்படையில் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பழங்குடி மாணவி ரோஸ்னா

மாணவர் அமைப்புகளுக்கு கேரள இடதுசாரிகள் கொடுத்துவரும் முக்கியத்துவம் நடந்துமுடிந்த உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளின் வெளியே வெளியுலகுக்குத் தெரியவந்திருக்கிறது. ஆர்யா ராஜேந்திரனும் ரேஷ்மா மரியமும் மட்டுமே பேசப்படுகிறார்கள். ஆனால், இடதுசாரி மாணவர் அமைப்புகளைச் சேர்ந்த மேலும் 21 பேர் ஊராட்சி மற்றும் மாநகராட்சிப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். வயநாடு பொழுதனா ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் 22 வயது மாணவியான அனஸ் ரோஸ்னா ஸ்டெப்பி, கோழிக்கோடு கல்லூரியில் விலங்கியல் இளநிலை மாணவர். பெண்களுக்கான பொதுத் தொகுதியில் வெற்றிபெற்றிருக்கும் ரோஸ்னா பழங்குடியின மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளாட்சிப் பிரதிநிதிகளாக இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் பெண்கள் பெருமளவு இடம்பிடித்திருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் பொருளாதாரப் பின்னணி எதுவும் இல்லாதவர்கள் என்று இந்த ஜனநாயகப் பெருமையை விரித்துக்கொண்டே போகலாம். இது ஏதோ ஐக்கிய முற்போக்குக் கூட்டணியையும் தேசிய ஜனநாயகக் கூட்டணியையும் எதிர்கொள்வதற்கு இடதுசாரிகள் கையாண்டிருக்கும் தேர்தல் வியூகம் என்று பொருள்கொண்டுவிடக் கூடாது. ஏனெனில், கடந்த உள்ளாட்சித்

தேர்தலில் திருவனந்தபுரத்தின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் வழக்கறிஞரான பிரசாந்த், இளைஞர்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் ஒரு நெடிய பயணத்தின் முயற்சியாகவே தான் பொறுப்பேற்பதாகக் கூறியிருந்தார். இப்போது அவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். உள்ளாட்சி நிர்வாக அனுபவங்களோடு சட்டமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தயார்படுத்திக்கொண்டிருக்கின்றன கேரள இடதுசாரிக் கட்சிகள்.

கசப்பான உண்மை - கேரள உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளை மகிழ்ச்சியோடு சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொண்டிருக்கும் தமிழக இடதுசாரிகளின் மனநிலையைப் புரிந்துகொள்வதுதான் கஷ்டமாக இருக்கிறது. இவர்கள் ஒருபோதும் கேரளத்தை முன்மாதிரியாகக் கொள்வதில்லை என்பதுதான் கசப்பான உண்மை. தமிழக இடதுசாரிக் கட்சிகள் தங்களுடைய மாணவர் அமைப்புகளைக் கைக்குள் அடங்கிய சிறு பிரிவாகவே நடத்த முயற்சிக்கின்றன. மாநில அளவிலான பொறுப்புகளில் மாணவர் அமைப்புகளின் செல்வாக்கு முற்றிலும் குறைந்து அவை தொழிற்சங்க நிர்வாகிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன.

இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளராக இருக்கும் டி.ராஜாவும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினராக இருக்கும் ஜி.ராமகிருஷ்ணனும் மாணவர் அமைப்பிலிருந்து உருவானவர்கள்தான். இனிவரும் காலத்தில் தமிழகத்தில் அப்படியொரு சூழல் அக்கட்சிகளுக்குள் உருவாகும் என்று யாராலும் நம்பிக்கை அளிக்க முடியுமா? பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவர்கள் எந்த ஊருக்குச் சென்றாலும் மாணவர்களின் அறைகளில் தங்கி அவர்களுடன் விடிய விடிய உரையாடி உருவாக்கப்பட்ட மாணவர் அமைப்புகள் இன்று என்ன நிலையில் இருக்கின்றன?

ஓர் உதாரணம். கடந்த மக்களவைத் தேர்தலின்போது நாகப்பட்டினம் தொகுதியில் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குள் உட்கட்சித் தேர்தல் நடந்தது. மாணவர் அமைப்புகளிலிருந்து கட்சிக்கு வந்த மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், வழக்கறிஞர் த.லெனின் ஆகியோரும் போட்டியிட்டனர். கடைசியில், மாணவர் அமைப்புகளின் பங்கேற்பை விரும்பாமல் முன்னாள் மக்களவை உறுப்பினரே மீண்டும் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதுதான் உண்மை நிலைமை. இடதுசாரிகள் மட்டுமல்ல, திராவிட இயக்கத்தவரும் தங்களைச் சுயபரிசீலனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டிய நேரமிது.

கல்வி வள்ளல் என்று மாற்றுக் கட்சியினராலும் போற்றப்பட்ட காமராஜரை எதிர்த்து ஒரு கல்லூரி மாணவர் வெற்றிபெற்றார் என்ற பெருமையைக் கொண்டது தமிழ்நாடு. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னை பச்சையப்பன் கல்லூரியும், தஞ்சாவூர் சரபோஜி கல்லூரியும் மொழியுரிமைப் போரின் மையங்களாகத் திகழ்ந்தன. க.அன்பழகன், இரா.நெடுஞ்செழியன், எஸ்.டி.சோமசுந்தரம், எல்.கணேசன் என்று மாணவர்களைத் தேடித் தேடி அரசியலுக்கு அழைத்துவந்த தலைவர்களும் இருந்தார்கள். இன்று இரண்டு கட்சிகளிலுமே மாணவர் அமைப்புகளின் வழியே வந்தவர்களுக்கு அளிக்கப்படுகிற அதிகபட்ச முக்கியத்துவம் செய்தித் தொடர்பாளர் என்பதுதான். அவர்களது அரசியல் பங்களிப்பு என்பது தொலைக்காட்சி விவாதங்களுடனேயே முடிந்துவிடுகிறது.

தமிழகத்தில் இடதுசாரிக் கட்சிகளும், திராவிடக் கட்சிகளும் மாணவர் அமைப்புகளிலிருந்து வந்த எத்தனை பேருக்கு கட்சிக்குள்ளும் உள்ளாட்சியிலும் சட்டமன்ற, நாடாளுமன்ற அவைகளிலும் இடம்கொடுக்கின்றன என்ற கேள்விக்கு முகம்கொடுத்தே ஆக வேண்டும். மாணவர் அமைப்புகளில் பங்கெடுப்பவர்கள் அனைவருக்குமே பொறுப்புகளையும் பதவிகளையும் அளிக்க முடியாது என்பது

எதார்த்தம்தான். ஆனால், மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் கட்சி உறுப்பினர்களில் எத்தனை பேர் மாணவர், இளைஞர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என்பது விவாதத்துக்குரிய கேள்வி.

மாணவர்களுக்கு அரசியல் வாய்ப்புகள் - தமிழகத்தின் இருபெரும் கட்சிகளிலும் ஏற்கெனவே இருக்கும் மூத்த தலைவர்களின் வாரிசுகளையன்றி புதியவர்களுக்கு எந்த வாய்ப்பும் கிடைக்காது என்ற நிலையிலேயே, மாணவர்களும் இளைஞர்களும் தொடங்கப்படும் எந்தவொரு புதுக் கட்சியிலும் இணைந்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்ற எதார்த்தத்தையும் இந்தக் கட்சிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் வழங்கும் அரசியல் வாய்ப்புகளை இடதுசாரி, திராவிடக் கட்சிகளின் மாணவர் அமைப்புகள் வழங்கவில்லையென்றால், அதன் விளைவுகள் முன்கூட்டியே அனுமானிக்கக் கூடியதே. வாடகை வீட்டில் வசிக்கும் எலெக்ட்ரீஷியன் ராஜேந்திரன் தனது மகளின் அரசியல் பங்கேற்புக்கு எதிராக இல்லை. வயநாடு பொழுதனாவில் ஊராட்சி மன்றத் தலைவராகி யிருக்கும் ரோஸ்னா, சிவில் சர்வீஸ் முதனிலைத் தேர்வு எழுதி முடிவுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். தமிழகத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் அரசியலில் ஈடுபடுவதை விரும்பவில்லை என்பதோடு, அரசு அமைப்புகளுமே அதை விரும்புவதில்லை. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் விண்ணப்பங்களில் பதில் அளிக்க வேண்டிய முக்கியமான கேள்விகளில் ஒன்று, நீங்கள் அரசியல் கட்சியில் உறுப்பினரா என்பது. அரசு ஊழியர்கள் கட்சி உறுப்பினர்களாக இருக்கக் கூடாது என்பது அவசியமான விதிமுறை. ஆனால், கட்சி உறுப்பினர்களாக இருந்தவர்கள் அரசுப் பணிக்கே விண்ணப்பிக்கக் கூடாது என்பதுதான் இளைஞர்களிடம் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் அரசியல் நீக்கம். வாக்களிக்கும் உரிமை என்பது தனது அரசியல் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கியதுதான். https://www.hindutamil.in/news/opinion/columns/616689-student-politics.html

மின்னஞ்சல் ஊடக வழியாக எமது நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு
தயவு செய்து தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்புங்கள்.
வாசகர்கள் உவந்தளிக்கும் நன்கொடையே எமது பணிக்கு நிதி ஆதாரம்.
நன்கொடைகள் அனுப்புவோர் பணவிடை, காசோலை உடனடி பணம் அனுப்பும் வசதியை பயன்படுத்தலாம்.
பெயர் : K. M. Selvaraj
வங்கி : South Indian Bank
நகரம் : Gudalur, The Nilgiris
கணக்கு எண்: 0754053000004800
IFSC / NEFT Code : SIBL0000754

தொடர்புக்கு : K. M. செல்வராஜ், ஆசிரியர், திருஅவை
செய்தி, 7/151A, ஹெல்த்கேம்ப், கூடலூர் - 643 211, நீலகிரி மாவட்டம், தமிழ்நாடு
Cell : 9442541471 email : thiruavaiseithi@gmail.com

ஆண்டவரே, இம்மட்டும் நிகழ்ந்த அனைத்துக்கும் நன்றி.
இனிமேல் நடக்க இருப்பவை அனைத்துக்கும், ஆகட்டும் இறைவா, ஆமென்.
என் ஆண்டவரே, என் தேவனே! உமது அரசு வருக. உமது திருவுளம் நிறைவேறுக.
வாரும் ஆண்டவராகிய ஏசுவே வாரும். ஆமென்.